மலேசிய வாழ்த்து



தலைவர் கலைஞர்

மணவிழா வாழ்த்து

தலைவர் கலைஞர்

தலைமைக் கழக வெளியீடு
திராவிட முன்னேற்றக் கழகம்
"அண்ணா அறிவாலயம்", சென்னை – 600 018.

முதற் பதிப்பு – 1997

விலை : ரூ. 5.00

அச்சிட்டோர் :

ஹை–டெக் ஆப்செட் (பி) லிட்.

1, அங்கமுத்து நாயக்கன் தெரு,

இராயப்பேட்டை, சென்னை – 600 014.

தொலைபேசி : 855 2697

இந்நூல் .....

பொதுமக்கள் கருத்தை வலிவாக முன் நடக்கச் செய்தால் சட்டம் நொண்டிக் கொண்டே பின்னால் வரும் என்பது ஆங்கிலப் பழமொழி.

தன்மான இயக்கம் உருவாக்கி வெற்றி கண்ட பல்வேறு களங்களில் சுயமரியாதைத் திருமணமும் ஒன்று. இந்தக் கலாச்சாரப் புரட்சியில் தன்னை ஒரு போர் வீரனாய் ஒப்படைத்துக் கொண்டு இன்று வழி காட்டும் தலைவராயுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் பட்டறிவும் – பகுத்தறிவும் செறிந்த திருமண வாழ்த்துரைகளின் தொகுப்பை பணிவுடன் உங்கள் முன் படைக்கின்றோம்.

என். செல்வேந்திரன்
கழக வெளியீட்டுச் செயலாளர்,
தி.மு.க.

சுயமரியாதைத் திருமணம்

வாழ்வும் வாழ்க்கையும்:

வாழ்வு என்ற சொல் மிருகங்கள், பறவைகள் இவைகளைக் குறித்துவரும் நேரத்தில் மிருகங்கள் வாழ்கின்றன - பறவைகள் வாழ்கின்றன என்றும் மனிதர்களைக் குறிக்கின்ற நேரத்தில் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்பதற்குப் பதிலாக மனிதர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்ற அளவிலும் பயன்படுத்தப்படுகின்ற சொல் ஆகும்.

மனிதன் வாழ்வதில்லை; அவன் வாழ்க்கை நடத்துகிறான். இலக்கணத்தோடு எப்படி வாழ வேண்டும் என்று சில வரைமுறைகளை வகித்துக்கொண்டு அதற்கேற்ப வாழ்க்கை நடத்துகின்றான்.

இயற்கையின் நியதிப்படி அவன் வாழ்ந்துகொண்டு இருக்கிறான் என்றில்லாமல் வசதிக்கேற்ப சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கேற்ப வளர்ச்சிக்கேற்ப வாழ்க்கை நடத்திக்கொண்டு வாழ்கிற ஆற்றல் பெற்றவன்தான் மனிதன்.

அந்த ஆற்றலை உணராது இருந்தது இந்தத் தமிழகம் ஒரு காலத்திலே. அதை நமக்கெல்லாம் உணர்த்தியவர் தந்தை பெரியார் அவர்கள்தான்.

சுயமரியாதைத் திருமணம்

இத்தகையத் திருமணங்கள் இந்த முறையில் ஏன் நடைபெற வேண்டும் என்பதற்கான விளக்கங்களை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் தமிழகத்திலே இன்று இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை.

தந்தை பெரியார் அவர்கள் பல எதிர்ப்புகளுக்கிடையே இழிமொழிகளைத் தாங்கிக் கொண்டு, ஏசல் கணைகளை எல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, சுயமரியாதைக் கொள்கைகள் தமிழ்ச் சமுதாயத்திலே பரவிட வேண்டும் என்கிற தளராத ஊக்கத்தோடு தொடர்ந்து ஆற்றிய அரும்பணியின் காரணமாகவும் அவருக்குத் துணை நின்று பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்களால் வளர்க்கப்பட்ட தம்பியரும் தொய்வில்லாமல் ஆற்றிய தொண்டின் காரணமாகவும் ஒரு ஐம்பது ஆண்டுக் காலத்திற்கு முன்பு இகழப்பட்ட அல்லது வியப்புடன் நோக்கப்பட்ட இந்தத் திருமணமுறை இன்று தமிழர்கள் பெரும்பாலோரால் வரவேற்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், சுயமரியாதைத் திருமணங்கள்- இனிமேல் நடக்கின்ற திருமணங்களும் செல்லும்; இதுவரையில் நடந்துள்ள திருமணங்களும் சட்டப்படி செல்லும் என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தபொழுது தமிழக சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நாடெங்கும், சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் சிலபேர் இந்தத் திருமண முறை தேவைதானா? என்ற சர்ச்சையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள.

இத்தகைய திருமண விழாக்கள் சுமார் முப்பதாண்டு காலத்திற்கு முன்பு நம்முடைய இல்லங்களில் நடைபெறுவது என்றால் முதலில் ஊரார் எதிர்க்கிறார்களோ இல்லையோ, வீட்டிற்குள்ளேயே பேரெதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டியது இருக்கும். உறவினர்கள் ஒத்துப் போக மாட்டார்கள். இந்த முறை ஆகுமா? இது நீதி அல்லவா? குடும்பத்திற்கு ஆகுமா? குழந்தை பிறக்குமா? என்றெல்லாம் கேள்விகளை எழுப்பி இப்படிப்பட்ட திருமணங்களுக்குத் தடை விதிக்கின்ற காலம் ஒன்று இருந்தது.

சேலத்தில் நடைபெற்ற ஒரு திருமண விழாவில் நான் பேசும்பொழுது, 'தமிழர் வீட்டுத் திருமணங்களில் தமிழர்களாக வீற்றிருக்கிற மணமக்களையும் மேடையிலே உட்காரவைத்துக் கொண்டு எதிரிலே ஆயிரக்கணக்கான தமிழ்க்குலத்து தாய்மார்களை - ஆடவர்களை - தமிழ்க் குலத்து முதியோர்களை - முதிரா இளைஞர்களை உட்கார வைத்துக்கொண்டு யாருக்கும் புரியாத மொழியிலே மந்திரம் என்கிற பெயரால் வாழ்த்துவது அல்லது ஆசீர்வதிப்பது தமிழினத்திற்கே அவமானமில்லையா? நம்மை எல்லாம் தலைகுனிய வைக்கிற செயல் இல்லையா? என்று நான் கேட்டேன்.

இந்தக் கேள்வியை அடிப்படையாக வைத்து இன்றைக்கு சில பேர் நம்முடைய பழைய காலத் திருமண முறைகளெல்லாம் தலைகுனிவைத் தருகிறதா? இதைப் பற்றி ஆராயலாம்; வாருங்கள் என்று அதையும் வியாபாரமாக ஆக்குவதற்கு எண்ணிய சில பேர் கிளம்பியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். என்னுடைய இல்லதத்தில் என்னுடைய நாட்டில் - என்னுடைய மொழியில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைத்தான் தன்மானமுள்ள நிகழ்ச்சியாக நான் கருதுவேன். பிறிதொரு மொழியினுடைய ஆதிக்கத்திற்கு இந்த நிலம் அடிமைப்பட்டுக் கிடக்கிற வரையில் நாம் தலைகுனிந்து கொண்டுதான் இருக்கிறோம் என்பதை இன்றைக்கு நான் திட்டவட்டமாக குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்னால், திராவிடர்க் கழகத் துவக்கக் காலத்தில் ஒரு சுயமரியாதைத் திருமணம் தஞ்சை மாவட்டம் பாபனாசத்தில். மணமகன் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர். நான் என் நண்பன் தென்னன் யாவரும் தலைமை வகித்து உரையாற்ற அழைக்கப்பட்டுச் சென்று கொண்டிருந்தோம். அதே நாளில் எனது மைத்துனர் சிதம்பரம் C.S. ஜெயராமனின் திருமணம் வேறோர் ஊரில் நடைபெறுகிறது. மைத்துனரின் திருமணத்தைக் கூடத் தவிர்த்துவிட்டு சுயமரியாதைத் திருமணத்தில் கலந்து கொள்ளும் ஆர்வத்துடன் சென்றிருந்தோம். மணமகனைத் தவிர்த்த மாப்பிள்ளை வீட்டார் கதர்ச் சட்டைக்காரர்கள் - தேசீயக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

மணவிழாப் பந்தலின் வாசலிலே எங்களைத் தடுத்து "கருப்புச் சட்டைக்காரன் யாரும் பந்தலுக்குள்ளேயே வரக்கூடாது" என்று கூச்சலிட - நாகரீகம் கருதி நாங்கள் யாவரும் ஊருக்கு வெளியே குளக்கரையில் போய் அமர்ந்துவிட்டோம்.

கருப்புச் சட்டை அணியாத நாங்கள் அனுப்பிய எங்கள் தோழர் ஒருவர் திருமணத்திற்குப் போய் வந்து அய்யர் மந்திரமோத புரோகித முறையில் திருமணத்தை நடத்தி முடித்ததைச் சொன்னார். வழக்கமாய் மணமேடையில் பெண்தான் அழுதுகொண்டிருப்பார். தன்னுடைய விருப்பம் நிறைவேறவில்லையே என்று இங்கே மாப்பிள்ளை அழுதுகொண்டிருந்த விசித்திரம் நடைபெற்றது.

தாலி கட்டியவுடன் புதிய உரிமையுடன் மணமகன் எங்களை அழைத்து மணவிழாவை வாழ்த்திப் பேசச் சொல்ல நானும் சென்று ஒரு மணிநேரம் உரையாற்றினேன். வந்திருந்த பெரும்பாலோர் நமது கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்தது விருந்து பரிமாற்றம். நாங்களும் எல்லோரோடும் சாப்பிட உட்கார்ந்தோம். அங்கும் பரிமாறுகிற இடத்தில் சில கதர்ச் சட்டைக்காரர்கள் கையில் உணவுப் பண்டங்களுடன் நின்றார்கள். எல்லோருக்கும் பரிமாறினார்கள் எங்களைத் தவிர. வெறும் இலையில் பந்தி முடிகின்ற வரையில் நாகரீகம் கருதி அமர்ந்திருந்து சாப்பிடாமலேயே எழுந்து வந்தோம். இந்தக் கொள்கையை மக்களிடம் கொண்டு செல்லத்தான் எத்தனை அவமானங்கள் - இழிவுகள் - சோதனைகள்!

இந்த இயக்கத்திற்கு எத்தனையோ சோதனைகள் வந்த நேரத்திலும்-வேதனைகளை நாம் தாங்கிக் கொள்ள வேண்டிய கட்டங்களைச் சந்தித்த போதும், "இந்த இயக்கத்தை இருக்க விடுகிறேனா, பார்; கூண்டோடு அழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன், பாருங்கள்!" என்று அறைகூவல் விட்டவர்கள் முன்பு

நாம் நம்முடைய வெற்றி பெருமிதத்தைக் காட்டுகிறோம் என்றால், அது தேர்தலிலே ஏற்படுகின்ற வெற்றி, தோல்விகள் என்ற அடிப்படையில் அல்ல; நம்முடைய கொள்கைகள் இன்று வளர்ந்திருக்கிறது. இந்த மணப்பந்தலில் நான் பார்க்கிறேன். நூற்றுக்கணக்கானவர்கள் ஆடவரும், பெண்டிரும் குழுமியிருந்து மணமக்களை வாழ்த்துகின்ற காட்சியைப் பார்க்கிறேன். அந்த அளவிற்கு இந்தக் கொள்கை போற்றப்பட்டு, வரவேற்கப்பட்டுள்ள ஒரு நிலையை எய்தி இருக்கிறது.

திருமணம் - அன்றும் - இன்றும்

முன்பு நடைபெற்ற திருமணங்களில் புரியும்படியாக வாழ்த்துக்களைக் கேட்டிருக்க முடியாது. புரோகிதர்கள் புடைசூழ நடைபெறும் திருமணங்கள்-அவர்கள், சாட்சிக்கு இங்கே அமர்ந்திருக்கிற மனித உருவங்களை எல்லாம் அழைத்து உங்களுடைய சாட்சியாக இந்தத் திருமண விழாவை நான் நடத்தி வைத்திருக்கிறேன். மணமக்கள் எல்லா நலன்குளம் பெற்று வாழவேண்டுமென்று வாழ்த்துங்கள் என்று தெளிவாக பேசுகிறோமே, அப்படி அவர்கள் சொல்வது கிடையாது. அவர்கள் அழைக்கின்ற சாட்சிகள் எல்லாம் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெட்டாயிராம் ரிஷிகள், கந்தர்வர், கின்னரர், கிம்புருடர், அட்டதிக்கு பாலகர்கள் ன்று இப்படி அந்தக் கடவுள் பட்டாளத்தை அழைத்து, அது போதாது என்று அக்கினி சாட்சியாக, அருந்ததி சாட்சியாக, நடைபெற்ற அந்தத் திருமணங்களை ஒரு காலத்தில் நாம் கண்டோம். ஆனால், அந்தத் திருமணமுறை இன்றைக்கு மாற்றப்பட்டு விட்ட காரணத்தால் அப்படி மாற்றிக்கொண்ட மணத் தம்பதிகளின் வாழ்க்கையில் ஏதாவது ஏமாற்றங்கள் உண்டா என்று இரண்டு முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் - அய்யரை வைத்து நடத்திய திருமணமானாலும் - அண்ணாவை - அய்யாவை - எங்களை வைத்து நடத்துகின்ற திருமணமானாலும் - இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் அவரவர்களுடைய மன இயல்புகளுக்கு ஏற்ப, அவரவர்கள் வகுத்துக் கொள்கின்ற வாழ்க்கை முறைகளுக்கேற்ப, அவர்களுடைய வாழ்வு அமைகிறதே அல்லாமல், 'அய்யர் வைத்து நடத்தினார், ஆகவே அமோகமாக வாழ்கிறார்கள்; சுயமரியாதை முறையில் திருமணம் நடைபெற்றது; அதனால் அவர்களுடைய வாழ்க்கை சரியாக அமையவில்லை!' என்று சொல்லத்தக்க விதத்தில் இந்தத் திருமண முறைகளில் விளைவுகள் இல்லை.

குடும்பக் கட்டுப்பாடு

அய்யரை வைத்துத் திருமணம் நடத்திய எத்தனையோ இல்லங்கள் குழந்தை இல்லாமல் காசிக்கும் ராமேசுவரத்திற்கும்

யாத்திரை செய்கின்ற கதைகளை எல்லாம் நாம் பார்த்திருக்கிறோம்.

சில கழக நண்பர்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களை ஓராண்டு காலம் கூட நானோ, பேராசிரியரோ வந்து நடத்திவைக்க வேண்டும் என்பதற்காகத் தள்ளி வைத்துவிடுகிறார்கள். அது எனக்கு நல்லதாகக் கூடத் தோன்றுகிறது.

ஏனென்றால் ஒரு குழந்தை பிறப்பது ஒரு வருட காலத்திற்கு நிச்சயமாகத் தடுக்கப்படுகிறது.

குடும்பநலத் திட்டத்தின் அடிப்படையில் கூட நான் சில நேரங்களில் அவர்களுடைய உறுதியை வரவேற்பதுண்டு.

அளவோடு பெற்று வளமோடு வாழ வேண்டும் என்ற கருத்தினை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை நாங்கள் அரசுப் பொறுப்பிற்கு வந்த அந்தக் காலத்திலே மாத்திரமல்ல. இந்த இயக்கத்தினுடைய ஆணிவேராக இன்றைக்கும் இருக்கின்ற சுயமரியாதை இயக்கத்தினுடைய தொடக்க காலத்திலேயே இத்தகைய குடும்ப நலத் திட்டக் கருத்தை நாங்கள் எடுத்துச் சொல்லி வந்து இருக்கிறோம்.

முள்வேலியும் பட்டுத் துணியும்

சமுதாயத்திலே ஏற்பட்டு விட்ட புறையோடிப்போன பல நிலைகளை நாம் மெல்ல மெல்லத்தான் - பக்குவமாகத்தான் - பிறருடைய மனம் புண்படாமல், அதே நேரத்திலே பண்படுத்துகின்ற அளவிலே நம்முடைய கொள்கைகளை அவர்களுடைய உள்ளத்திலே பதிய் வைக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சொற்பொழிவாளர்கள் கூட்டத்திலேயும் சரி, கழகத்தினுடைய பொதுக்குழுக் கூட்டங்களிலும் சரி, மற்ற நேரங்களிலும் சரி, நான் விளக்கி வந்திருக்கிறேன்.

நான் சில நாட்களிலே கலந்து கொள்ள இருக்கின்ற ஒரு திருமணவிழா அது. பெரியாருடைய கொள்கை வழி நிற்கின்றவருடைய வீட்டுத் திருமண விழா. அந்தத் திருமண விழாவிற்கு நான்தான் தலைமையேற்கிறேன். ஒரு வாரத்திற்கு முன்பு, அவர்கள் அந்தத் திருமண அழைப்பிதழை கொடுத்துவிட்டுப் போனார்கள்.

அதிலே தந்தை பெரியார் அவர்களுடைய படம் அச்சடிக்கப்பட்டு - திருமண விழாவிற்கு நான் தலைமை

தாங்குகிறேன் என்பவைகள் எல்லாம்கூட குறிப்பிடப்பட்டு - ஒரு சுயமரியாதைத் திருமண விழவிற்கு எப்படி மண விழா அழைப்பு மடல் அச்சடிக்கப்படுமோ அவ்வாறு அச்சடிக்கப்பட்ட இதழை என்னிடத்திலே தந்துவிட்டுப் போனார்கள்.

மணமகன் வீட்டாருடைய அழைப்பு மடல் வந்த பிறகு, நேற்றைய தினம் மணமகள் வீட்டாருடைய அழைப்ப ,மடல் வந்தது. அதிலும் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களுடைய தலைமையில் திருமணம் நடைபெறும் என்றுதான் போடப்பட்டு இருக்கிறது.

ஆனால் பத்திரிகையினுடைய தொடக்கத்திலேயே பகவான் துணை, முருகன் அருள் - இப்பொழுது நடைபெறுகின்ற வடமொழி ஆண்டைக் குறிப்பிட்டு, காலை 10 மணிக்குமேல் 11 மணிக்குள்ளாக, இன்ன லக்கினத்தில், இன்ன நட்சத்திரத்தில், பூரண சித்தயோகம் நிறைந்த நன்னாளில் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இன்னாருக்கும், இன்னாருக்கும் திருமணம் நடைபெறும் என்று அச்சடிக்கப்பட்டு இருந்தது.

நம்முடைய பட்டுத்துணி வேலியிலே இருக்கின்ற முள்ளிலே மாட்டிக் கொண்டிருக்கிறபொழுது, பட்டுத்துணியைப் படார் என்று இழுத்துவிடலாம். வேலியிலே முள்ளில் சிக்கிக் கொண்டது என்பதற்காக.. ஆனால், அப்படி இழுப்பதால் முள்ளுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை; பட்டுத் துண்டுதான் கிழியும்.

அதைப் போலத்தான் மூட நம்பிக்கைகள் என்கின்ற முள்ளில் - முள் வேலியில் - தமிழ்ச் சமுதாயம் என்ற பட்டுத்துணி விழுந்து கிடக்கிறது; அதை மெல்ல மெல்லத்தான் எடுத்துத் தீரவேண்டும்.

எண்ணெயும் தண்ணீரும்

சுயமரியாதைத் திருமணங்கள் குறித்து இன்று இங்கே நம்முடைய 'கும்பகோணம் பிரதர்ஸ்' ராமசாமி முதலியாரும், பழனியப்ப முதலியாரும் பேசினார்கள்.

நான் என்னுடை இளம்பிராயத்திலேயே கறுப்புச் சட்டை அணிந்து திராவிர் கழகப் பேச்சாளனாக என்னுடைய பணியை பெரியார் தலைமையில் தொடங்கிய மிக இளம்பிராயத்திலேயே

அந்த இரண்டு சகோதரர்களும் கலந்து கொண்டு உரையாற்றும் திருமணங்களுக்குச் சென்றிருக்கின்றேன். அநேகமாக **கே. கே. நீலமேகம்** அவர்கள்தான் அந்த மணவிழக்களுக்குத் தலைமை வகிப்பார்.

ஒரு முறை ஒரு திருமணத்தில் பேசும்போது - பழனியப்ப முதலியார் சுயமரியாதை சீர்திருத்தம் பற்றிபேசும்போது - குடந்தை தளபதி கே. கே. நீலமேகம் அவர்களைக் கேலி பேசினார். "இவ்வளவு சுயமரியாதை சீர்திருத்தம் பேசுகின்ற **கேகே நீலமேகம்** அவருடைய சுருட்டுக் கம்பெனிக்கு 'மும்மூர்த்தி வினாயகர் சுருட்டுக் கம்பெனி' என்று பெயர் வைத்திருக்கிறாரே, அப்படி வைக்கலாமா?" என்று கேட்டார்.

அதே விழாவில் நான் இறுதியாகப் பேசும்போது, "மும்மூர்த்தி வினாயகர் சுருட்டுக் கம்பெனி என்று பெயர் வைத்திருப்பது உண்மைதான்; வினாயகரை அந்தச் சுருட்டிலே சுருட்டி, அதை வாயிலே பற்ற வைத்துக் கொளுத்துகின்ற பணியை **கே.கே. நீலமேகம்** செய்திருக்கிறார்; அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது" என்று நான் சொன்னேன்.

அப்போதே 'இந்தப் பையன் இவ்வளவு குறும்புத்தனமாகப் பேசுகிறானே!' என்று பழனியப்ப முதலியார் சொன்னார். அந்தக் குறும்புக்காரன் இப்போது இந்த விழாவிற்குத் தலைமை வகிக்கவும், அதிலே **பழனியப்ப முதலியார், ராமசாமி முதலியார்** போன்றவர்கள் எல்லாம் கலந்து கொண்டு நாங்களே சொல்லத் தவறிவிட்ட - பலஅறிவுரைகளை மணமக்களுக்கு வழங்கவுமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதிலே ராமசாமி முதலியார் அவர்கள் பேசும்போது, காதலர் இருவர் கருத்தொருமித்து இருக்கக்கூடாது என்று ஒரு புதிய தத்தது**வத்தையே** சொன்னார் **(சிரிப்பு)** இது தத்துவங்கள் எடுபடும் காலம். **(பலத்த சிரிப்பு).**

'தத்துவங்கள்' தத்துபித்து என்றிருந்தாலும் கூட அதற்கு **'தத்துவம்'** என்ற பெயர் வைத்துவிட்டால் அவைகள் எடுபடும் காலம்.

ஆனால் ராமசாமி முதலியார் சொன்னது அப்படிப்பட்ட தத்துவம் அல்ல. உள்ளபடியே ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு தத்துவம்.

அபிப்பிராய பேதங்கள் இருக்க வேண்டும். ஆனால், அபிப்பிராய முரண்பாடுகள் ஏற்பட்டுவிடக் கூடாது. ஏனென்றால், வேறுபாட்டிற்கும், முரண்பாட்டிற்.கும் இடையே பெரிய இடைவெளி இருக்கிறது.

கருத்து வேறுபாடுகள் இருந்திட வேண்டும்; ஆனால் அந்த வேறுபாடுகளே முரண்பாடுகளாக ஆகிவிடக்கூடாது என்ற அரிய எண்ணத்தைத்தான் இங்கே ராமசாமி முதலியார் அவர்கள் வெளியிட்டார்கள்.

சுயமரியாதைத் திருமணச் சட்டம்

தந்தை பெரியார் அவாக்களால் ஆதரிக்கப்பட்ட எத்தனையோ அரசுகள் தமிழ் நாட்டிலே இருந்திருக்கின்றன. அவைகள் - ஒரு காலத்திலே ராஜாஜியினுடைய அரசாக இருந்திருக்கலாம்; ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருடைய அரசாக இருந்திருக்கலாம்; பெருந்தலைவர் காமராசருடைய அரசாகக்கூட இருந்திருக்கலாம். ஆனால், அவரால் ஆதரிக்கப்பட்ட அரசுகளானாலும், அல்லது அவர்பார்த்து உட்கார வைத்த அரசாக இருந்தாலும், அப்படிப்பட்ட அரசுகள் எல்லாம் செய்யமுடியாத காரியத்தை - சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்படி செல்லுபடியாக ஆக்க வேண்டும் என்கின்ற அந்தக் காரியத்தை செய்து முடித்த அரசு - பேரறிஞர் அண்ணா அவர்களது தலைமையிலே அமைத்த திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதையும் இந்தத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் - அதுவும், இனிமேல் நடைபெறுகின்ற மரியாதைத் திருமணங்கள்கூடச் சட்டப்படி செல்லுபடியாகும் என்று 'ரெட்ராஸ்பெக்ட் எபக்ட்' கொடுத்து ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, அதை நிறைவேற்றிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான் சாரும்.

எனவே, சட்ட வடிவம் பெற்றுவிட்ட இந்தச் சுயமரியாதைத் திருமணம் திடீர் என்று பெரியார் அவர்களாலோ அல்லது அண்ணா அவர்களாலோ உருவாக்கப்பட்ட ஒரு முறை அல்ல.

இது அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று. உருவாக்கப்பட்டதற்கும், அறிமுகப்படுத்தப்பட்டதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. உருவாக்கப்படுவது என்றால் இல்லாத ஒன்றைப் படைப்பது. இருக்கின்ற ஒன்றை மக்களுக்கு அறிமுகப்படுத்தியதுதான் இந்தச் சுயமரியாதைத் திருமணம்.

பன்னெடு நாட்களுக்கு முன்பு பழந்தமிழர்களுடைய காலங்களிலேயே நாம் நம்முடைய கலை-பண்பாடு நம்முடைய இலக்கியம்-நம்முடைய வரலாறு-இவைகளையெல்லாம் ஊன்றிப் படித்த நேரத்தில், தமிழன் அவனுக்கென ஒரு முறையை வகுத்துக் கொண்டு தன்னுடைய மணவிழாவை நடத்திக் கொண்டான் என்று நம்முடைய தமிழ் இலக்கியங்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

அது இடைக்காலத்திலே வந்து புகுந்த ஒரு சில நம்பிக்கைகளின் காரணமாக, சில முறைகளின் காரணமாகப் பாழ்பட்டுப் போயிற்று.

இருந்தாலும், அன்றைக்கு இருந்த அந்த முறையை மீண்டும் தமிழ்ச் சமுதாயத்திலே அறிமுகப்படுத்திய பெருமை நம்மை ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களுக்கும் நம்மையெல்லாம் அரசியலிலே ஈடுபடுத்தி நடமாடவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் உரிய ஒன்றாகும்.

திருமணத் தளமும் திராவிடர் களமும்

இந்தத் திருமணங்கள் எவ்வளவு தேவையானவை என்பதை நெருக்கடி நிலை நேரத்தில் நான் உணர்ந்தேன். நெருக்கடி நிலைக் காலத்திலே பொதுக் கூட்டங்களிலே பேசமுடியாது. மேடை போட்டு கட்சி அரசியல் பேச முடியாது. கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாது என்கின்ற நிலை இருந்த பொழுதுதான் கட்சி அரசியல் பேசுவதற்கு ஒரு களமாக அமைத்துக் கொண்டது, அமைந்தது திருமண விழாக்கள்தான்.

அப்படிப்பட்ட திருமண விழாக்களிலே நான் நிச்சயமாக கட்சி அரசியல் பேசினேன். அப்படிப் பேசியபொழுது பெரியாரையும், அண்ணாவையும் மற்ற தலைவர்களையும் எண்ணிக் கொண்டேன். இப்படி ஒரு முறையை வகுத்துவிட்டுச் சென்றீர்களே! இல்லாவிட்டால் என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு முடியாமலேயே போயிருக்கும். அத்தகையப் பெருந்தகையாளர்களுக்கு - பேரறிவாளர்களுக்கு, இப்படிப்பட்ட விழாக்களில் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

காதல் மணமும் கலப்பு மணமும்

நமது சரித்திரம்

ஒரு மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்ற கணக்கைப் பார்ப்பதைவிட, எப்படி வாழ்ந்தான் என்ற கணக்கைப் பார்ப்பதுதான் சரியானதாகும். எத்தனையோ ஆண்டுகள் வாழ்ந்துவிடலாம். இப்பொழுதுகூட பத்திரிகைகளிலே அதிசயச் செய்திகளாக படிக்கின்றோம். ரஷ்யாவிலே 120 வயது கிழவர் ஒருவர் என்று புகைப்படம் வருகிறது. இந்தியாவிலே எங்கேயோ ஒரு கிராமத்தில் 110 வயது வரையிலே வாழ்ந்து கொண்டிருப்பவர் என்றெல்லாம் செய்தி வருகிறது.

அவர்கள் அந்தச் செய்திகளோடு மறைந்துவிடுகின்றார்கள். ஆனால், எத்தனை ஆண்டுகள் என்பதைவிட எப்படி வாழ்ந்தார்கள் என்ற முறையில் வெறும் கிழவர்கள் மாத்திரமாக மட்டும் ஆகிவிடவில்லை - பெரும் சரித்திரங்களாக ஆகி விடுகிறார்கள்.

கொள்கையும் குறிக்கோளும்

தம்முடைய கொள்கையின் உச்சிமுகட்டுக்கே செல்ல வேண்டும் என்ற பிடிவாதக்காரர் தந்தை பெரியார். ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் எதையும் படிப்படியாகச் செய்ய வேண்டும் என்பதிலே ஆர்வம் படைத்தவர். ஆனால் சென்று அடைய வேண்டிய குறிக்கோள் ஒன்றுதான். பெரியாருக்கும், அண்ணாவுக்கும் அதிலே முரண்பாடு இல்லை. கொஞ்சம் வேறுபாடு உண்டு. முரண்பாடு என்பது வேறு; வேறுபாடு என்பது வேறு. முரண்பாட்டையும் வேறுபாட்டையும் ஒன்றாகப் போட்டு யாரும் குழப்பிக் கொள்ளக் கூடாது.

முரண்பாடு என்பது எண்ணெயும் தண்ணீரையும் போன்றது. இரண்டும் ஒன்டோன்று சேராது. வேறுபாடு என்பது பாலையும் தண்ணீரையும் போன்றது. இரண்டும் ஒன்றோடொன்று சேரும். அதைப் போல பெரியாருக்கும், அண்ணாவுக்கும் கொள்கைகளை - குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே வேறுபாடான செயல்முறைகள் உண்டே தவிர, எண்ணம் ஒரே எண்ணம்தான். நாம் சென்றடைய வேண்டிய இடம் இது என்பதை அவர்கள் தீர்மானித்து வைத்திருந்தார்கள்.

பெற்றோர் ஏற்பாடு

பெரியவர்கள் பார்த்து நடத்துகின்ற திருமணங்களும் நாட்டிலே உண்டு. மணமகனோ-மணமகளோ அவர்களாகவே தங்களுடைய வாழ்க்கைக்கு உற்ற துணை இவர்கள் என்று நிச்சயித்துக் கொண்டு நடத்திக் கொள்கிற திருமணங்களும் உண்டு.

ஆனால் பெரியவர்கள் பார்த்து நடத்துகின்ற திருமணங்கள் எல்லாம் தீதாகி விடும் என்றோ - அல்லது ஒருவரையொருவர் காதலித்து நடத்திக் கொள்கிற திருமணங்கள் எல்லாம் தீதாகிவிடும் என்றோ முடிவுக்கு வர முடியாது.

இரண்டிலும் நன்மை, தீமை உண்டு. பெரியவர்கள் பார்த்து நடத்துகின்ற திருமணங்களிலும் தீமைகள் ஏற்படுவது உண்டு. நன்மைகள் ஏற்படுவதும் உண்டு. அதைப் போலவே ஒருவருக்கொருவர் காதலித்து நடத்திக் கொள்கிற திருமணங்களிலும் நன்மைகள் ஏற்படுவது உண்டு; தீமைகள் ஏற்படுவதும் உண்டு.

நமக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம் பெரியவர்கள் பார்த்து நடத்தி வைக்கின்ற திருமணங்களானாலும், காதலித்து நடத்திக் கொள்கிற திருமணங்களானாலும், அது நடைபெறுகின்ற முறை எப்படி இருக்கவேண்டும் என்பதில்தான் இன்றைக்கு இருக்கிற சர்ச்சையே. அவர்கள் நடத்திக் கொள்கிற திருமணம்-அவர்களுடைய பண்பாட்டிற்கு ஏற்ப - கலாச்சாரத்திற்கு ஏற்ப - நாகரிகத்திற்கு ஏற்ப - வரலாற்றிற்கு ஏற்ப இருக்க வேண்டுமா? அல்லது அறிவு இயக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையில், மூட நம்பிக்கை மொய்த்துக் கிடக்கின்ற சூழ்நிலையில் அந்தத் திருமணம் நடக்க வேண்டுமா என்ற இந்தக் கேள்விக்கு விடை காணத்தான் தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்திலே இந்தத் திருமண முறைகளை அறிமுகப்படுத்தத் தொடங்கினார்கள். அந்த முறையைத்தான் இன்றைக்கு நாம் கடைபிடிக்கிறோம்.

பெரியவர்கள் பார்த்து நடத்திய திருமணங்களுக்கும் பழங்காலத்து கதைகளிலே எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உண்டு. அவரவர்கள் காதலித்து நடத்திக் கொண்ட திருமணங்களுக்கும் பழங்காலத்து கதைகளிலே எத்தனையோ

எடுத்துக்காட்டுகள் உண்டு.

இராமயணக் கேள்விகள்

சீதையும், ராமனும் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால், அவர்கள் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார்களா? அல்லது பெரியவர்கள் ஏற்பாடு செய்த சுயம்வரத்திலே ராமன் வெற்றி பெற்று சீதையை திருமணம் செய்து கொண்டானா என்றால், அங்கேதான் சிக்கலேகூட வருகிறது.

ராமன் மிதிலாபுரியில் இருக்கிற வில்லை வளைக்க -- வில்லை வளைத்து அதிலே வெற்றி பெற்று சீதையை மணம் புரிய வந்து கொண்டிருக்கிறான். ஜனகனுடைய ஏற்பாடு அப்படி. அந்த வில்லை யார் வளைக்கிறார்களோ அவர்களுக்குத்தான் தன்னுடைய மகள் சீதையைத் திருமணம் செய்து தருவேன் என்று ஜனகன் அறிவித்திருக்கிறான். ராமனும் இலக்குவனும் வருகிறார்கள்; விசுவாமித்திரரும் அங்கே வருகிறார். வந்து கொண்டிருக்கும்போதே, மாளிகைக்குள் நுழையாமல் இருக்கும்போதே, வரும் வழியிலேயே மாடத்தில் நிற்கும் சீதையை ராமன் பார்க்கிறான். ராமனும் சீதையும் பார்க்கிறார்கள்; அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள் என்று ஒருவரையொருவர் நோக்கிய நேரத்திலேயே காதல் பிறந்து விடுகிறது.

நான் கேட்கிறேன், வந்த ராமன் வில்லை வளைக்காமல்போய் இருந்தால் - அந்தக் காதல் என்ன ஆவது? அது ஒரு கேள்விக்குறி! நான் அதை விட்டுவிடுகிறேன்.

வில்லை வளைத்தால்தான் திருமணம். இதுதான் ஜனகனின் நிபந்தனை. நான் கேட்பது - வில் வளைக்கப்பட்டதா? அல்லது உடைக்கப்பட்டதா? வளைந்திருந்தால் திருமணம் செய்து கொண்டிருக்கலாம். அவன் உடைத்தேவிட்டான். இராவணனால் அந்த வில்லைத் தூக்க முடியவில்லை; பெரிய பெரிய வீராதி வீரர்கள் எல்லாம் தூக்கிப் பார்த்தார்கள். முடியவில்லை. பிறகு ராமன் வந்து எடுத்தான்; எடுத்த எடுப்பிலேயே வில் முறிந்து விழுந்தது. அவனுக்குச் சீதையைத் தந்தார்கள். இது ராமாயணம்.

ஒருவேளை ராவணனும் மற்றவர்களும் அந்த வில்லின் தன்மையை உணர்ந்தவர்களாக இருந்திருக்கக்கூடும். அதனைக்

கையால் தொட்டு எடுத்தாலே முறிந்து விடும் என்பதற்காகத்தான் தூக்காமல் போய் இருக்கக்கூடும். அறியாப் பிள்ளையான ராமன் அதனை அவசரமாகத் தூக்கிய காரணத்தால் அது உடைந்து விழுந்திருக்கக்கூடும்.

இது ராமாயணக் காலத்திலே - பெரியவர்கள் பார்த்து ஏற்பாடு செய்து - பெரியவர்களால் நடத்தி வைக்கப்பட்ட ஒரு திருமண முறை. இடையிலே ஒரு காதல் வேறு; இரண்டும் இணைந்த முறை.

நளன்-தமயந்தி

தமயந்திக்கு நளனைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம்; இருந்தாலும் கூட பழைய கால மன்னர் முறைப்படி சுயம்வர மண்டபம் ஏற்பாடானது.

தமயந்தி நளனை மணக்காமல் தடுத்துவிட வேண்டுமென்று எண்ணிய வாயு, அக்னி போன்ற தேவாதி தேவர்கள் எல்லாம் நளனைப் போல் உருக்கொண்டு அந்த மண்டபத்தில் வந்து நிற்கிறார்கள். ஆக பல நளன்கள் அங்கே நிற்கிறார்கள். அதிலே உண்மையான நளனும் நிற்கிறான்.

இவள் யாருக்கு மாலை இடுவது? தமயந்தி திகைக்கிறாள். பிறகு தமயந்தி உண்மையான நளனைக் கண்டுபிடித்துவிடுகிறாள். எப்படி என்றால் - புராணக் கருத்துப்படி தேவர்களின் இமைகள் மூடாது; விழித்தபடியே இருக்கும்; சாதாரண மனிதர்களுடைய இமைகள்தான் மூடி மூடித் திறக்கும்; இதை உற்றுப் பார்த்தாள் தமயந்தி; அக்னி, வாயு போன்ற மற்ற தேவர்கள் எல்லாம் நளன் உருவிலே நின்றாலும்கூட, அவர்களுடைய இமைகள் எல்லாம் ஆடாமல் அசையாமல் இருந்தன. உண்மையான நளனுடைய இமைகள் மட்டும் அசைந்து கொண்டிருந்தன. அதனைக் கண்டுபிடித்த தமயந்தி அவனுக்கு மாலையிட்டாள். இது காதல் திருமணம்.

அந்தக் காதல் திருமணத்திலே நளன் பட்டபாடுகள் என்ன என்று உங்களுக்கு எல்லாம் தெரியும். அதற்குப் பிறகு இருவரும் ஒன்று சேர்ந்தார்கள்.

சகுந்தலையும், துஷ்யந்தனும் கானகத்தில் சந்தித்து கணையாழி மாற்றிக் கொள்கிறார்கள்; அது காதல் திருமணம். பெற்றோர்கள் பார்த்து நடத்தி வைத்த திருமணம் அல்ல; அதற்குப் பிறகு அந்தக் கணையாழியைச் சகுந்தலை காணாமல் போக்கிவிட்ட காரணத்தால், சகுந்தலை அரண்மனைக்கு வருகின்ற நேரத்தில் துஷ்யந்தன் அவளை நீ யார் என்றே கேட்கிறான். காரணம் கணையாழி இல்லாத காரணத்தால் நீ என்னுடைய மனைவியே அல்ல என்று மறுத்துவிடுகிறான். பிறகு அந்தக் கணையாழி எப்படியோ கிடைத்த பிறகு ஏற்றுக் கொள்கிறான்.

எனவே காதல் திருமணத்திலும் சங்கடம் உண்டு. பெரியவர்கள் பார்த்து நடத்தி வைக்கின்ற திருமணத்திலும் சங்கடம் உண்டு.

ஆனால் ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் பெற்றோர்கள் பார்த்து நடத்தி வைக்கின்ற திருமணம் அந்தச் சாதிக்குள்ளேயே நடத்திக் கொள்கின்ற திருமணங்களாக இருக்கும்.

பெற்றோர்களை மீறி நடைபெறுகின்ற காதல் திருமணங்கள் நூற்றுக்குத் தொண்ணூறு திருமணங்கள் கலப்புத் திருமணங்களாக இருக்கும்.

அந்த வகையில் சாதி ஒழிப்புத் திருமணங்கள் நடைபெற வேண்டுமானால்-காதல் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள் நாட்டிலே நடைபெற வேண்டும் என்கின்ற கொள்கை உடையவன் நான். கொள்கையை உதட்டளவிலே சொல்லி விட்டுப் போகிறவன் அல்ல; வீட்டளவில் அதனை நடத்திக் காட்டிய பெற்றோர்களில் ஒருவன்தான் நான்.

காதல் திருமணங்கள் மூலம் கலப்புத் திருமணங்கள் ஏற்பட வழி ஏற்படும்.

சமத்துவம்

தமிழ் நிலம்

வீட்டில் சுவையான பண்டங்கள் ஒரு ஆணுக்கு எப்படித் தேவையோ, தான் உண்ணுகின்ற பண்டங்கள் எப்படிச் சுவையாக இருக்க வேண்டுமென்று ஆண் கருதிறானோ,

அதைப்போலவேதான் பண்டங்கள் சுவையாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் தனக்கென கணவன் தான் விரும்புகிற பொருட்களை வாங்கித் தந்தாலும், தராவிட்டாலும், தன்னுடைய கணவனுடைய நலம் ஒன்றே உயிரென கருதுகிற பெண்கள் நிறைந்த நிலம்தான் நம்முடைய தமிழ் நிலம்.

தமிழ் நிலத்திலே உள்ள பெண்களுடைய பண்பாடு அத்தகைய போற்றுதற்குரிய பண்பாடாக இருந்து வருகிறது. இதிலே ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரு சமத்துவ சூழ்நிலை ஏற்படவேண்டும். ஆணும், பெண்ணும் எப்படி சுகதுக்கங்களை பகிர்ந்து கொள்கிறார்களோ அதைப்போல உரிமைகளையும் அவர்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகிட வேண்டும். ஆண்கள் எப்படி விஞ்ஞானிகளாக வித்தகர்களாக விளங்குகிறார்களோ, அதைப்போல பெண்களும் விளங்கிட வேண்டும் என்ற சீரிய சிந்தனை இன்று உலகத்திலே பல்வேறு பகுதிகளிலே கிளர்ந்தெழுந்து, அந்தச் சிந்தனை இந்தியத் திருநாட்டையும் தழுவிடத் தொடங்கித் தமிழகத்திலேயும் புதிய விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

பொதுவாக ஆண், பெண் சமத்துவம் பற்றி நாம் பேசிக்கொண்டேயிருந்தாலும், ஆண்களுக்குரிய உரிமை பெண்களுக்குத் தேவை என்று நாம் வாதிட்டாலும்கூட அந்த உரிமைகளைத் தரத் தயங்குகின்ற ஆண்குலம்தான் இன்றைக்கும் உலகத்திலேயே பெரும்பான்மையாக இருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

எனவே, உதட்டளவில் இல்லாமல் ஆண்-பெண் சமத்துவத்தை, ஆணும் பெண்ணும் உரிமைகளைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதை நாம் வழக்கத்திலே, செயலிலே கொண்டு வர வேண்டிய கடமையினை நாம் நிறைவேற்றியாக வேண்டும். அதைத்தான் இன்றுள்ள முன்னேறிய சமுதாயம் எடுத்துச் சொல்லுகிறது என்றாலும்கூட, சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும்,.பகுத்தறிவு தளகர்த்தர்களும் அன்றும் இன்றும் இந்தச் சமுதாயம் ஓரளவு விழிப்பினைப் பெற்றிருக்கிறது. முழுமையான விழிப்பினைப் பெற்றுவிட்டதாக நான் கூற இயலாது.

ஏனென்றால், முழுமையான விழிப்புணர்ச்சியை இந்த நாடு பெறவில்லை; குறிப்பாகத் தமிழகம் பெறவில்லை. அதிலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிற நாம் பெற்றிடவில்லை.

இஸ்லாமிய மணச் சடங்கு

இஸ்லாமிய சமுதாயத்தினுடைய சடங்கு அவர்களுடைய திருமணமுறை இவைகள் ஏறத்தாழ தந்தை பெரியார் அவர்களால் தமிழ்ச் சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட சுயமரியாதை அல்லது சீர்திருத்தத் திருமணமுறையை ஒத்ததென்பதை நான் விளக்கிடத் தேவையில்லை.

மதச் சம்பிரதாயங்கள் இஸ்லாமிய திருமண முறையிலே இடம் பெற்றாலும் கூட, அந்த மதச் சம்பிரதாயங்களுக்கு இடையிலேயும் ஒரு சமுதாயச் சீர்திருத்தம், புதுமைகள் அதிலே ஒளிவிடுவதை என்னால் காண முடிகிறது. என்னால் காணமுடிகிறதென்றால் எங்களுக்கெல்லாம் அதைக் காட்டித் தந்த பெருமை தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் உண்டு.

இஸ்லாமிய சமுதாயத்திலே நடைபெறுகின்ற திருமணவிழா நேரத்திலேகூட மணமகனுடைய கருத்தை அறிவதற்காக ஒரு தூதுக்குழுவும் பிறகு மணமகளுடைய கருத்தை அறிவதற்காக அதே தூதுக்குழுவும் சென்று இருவரும் தங்களுடைய ஒப்புதலை அளித்த பிறகு அவர்களுடைய வாழ்க்கை இணைப்பை ஒரு ஒப்பந்தமாகவே செய்கின்ற அந்த நிகழ்ச்சிகள் இந்தத் திருமணத்திலே இடம்பெறுகின்றன.

எனவேதான் தொடக்க காலத்திலே சுயமரியாதைத் திருமணங்களைக்கூட வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்றேதான் நாம் தெளிவாக அன்றைக்குக் குறிப்பிட்டோம். அதற்குப் பிறகு சுய மரியாதைத் திருமணத்தினுடைய உண்மைக் கூறுகள். இந்து மதம் என்றழைக்கப்படுகின்ற, அப்படி அழைக்கப்படுகின்ற நிலைக்கு ஆளான தமிழ்ச் சமுதாயத்தின் மக்களுடைய இல்லங்களிலே நடைபெறுகின்ற விழாக்கள் இந்த மாறுதலுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தைத் தந்தை பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் எடுத்துக் காட்டியபோது, அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்திலே நடைபெறுகின்ற இந்த ஒப்பந்தம் எத்தகைய கீர்த்தியானது என்பதை எடுத்து விளக்கியிருக்கின்றார்கள்.

படிப்படியான சீர்திருத்தம்

படிப்படியாக நடைபெறக்கூடிய சீர்திருத்தங்கள் எந்தச் சமுதாயத்திலும் நடைபெற வேண்டும் என்கின்ற ஆசையுடையவன் நான்.

உலகத்திலே பல்வேறு இஸ்லாமிய நாடுகளில் இந்தியாவைப் போல் இல்லாமல் இன்னும் எவ்வளவோ முற்போக்கான எண்ணங்கள்-எவ்வளவோ முற்போக்கான நடவடிக்கைகள் பல்வேறு இஸ்லாமிய நாடுகளிலே நடைபெற்றிருக்கின்ற நிலைமைகளையெல்லாம் நாம் பார்த்திருக்கின்றோம்.

நெடிய தொடர்பு

துருக்கியிலே கமால்பாட்சா இப்படிப்பட்ட புரட்சி களையெல்லாம் இஸ்லாமிய சமுதாயத்திலே தேவை என்று அறிவித்தார். அவைகளையெல்லாம் செய்கின்ற அளவிற்கு நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்என்பதை இஸ்லாமிய சமுதாயத்திலே உள்ளவர்கள் யாரும் மறந்திருக்க முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் முன்னேற்றக் கழகத்திற்கும் இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற இஸ்லாமிய பெருமக்களுக்கும் உள்ள தொடர்பு இன்று நேற்று ஏறபட்டதல்ல, நீண்டகாலத் தொடர்பு.

நான் இந்த மங்கல விழாவில் நம்முடைய மறைந்துவிட்ட அருமைத் தலைவர்களிலே ஒருவரான காயிதேமில்லத் அவர்களை நினைவு கூர்வது தவறு இல்லை என்று கருதுகிறேன். காயிதேமில்லத் அவர்கள் தன்னுடைய இறுதி மூச்சு பிரிகிற நேரத்திலேகூட அருகிலே இருந்த என்னுடைய கையைப் பற்றி தன்னுடைய கன்னங்களிலே ஒத்தியவாறு சொன்னார்; "கருணாநிதி அவர்களே இந்தச் சமுதாயத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்திருக்கிற நன்மைகளை இந்தச் சமுதாயம் நன்றி உணர்வோடு என்றென்றும் பாராட்டும்; அதனை மறந்திடாது" என்று காயிதே மில்லத் அவர்கள் சொன்ன வாசகங்கள் இன்றும் என்னுடைய நினைவில் பசுமையாக நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

நபிகள் நாயத்தினுடைய விழா, அரசாங்க சார்பிலே கூட கொண்டாட்டப்படவேண்டும் - என்ற அளவிலே நபிகள் நாயகம் விழாவிற்கு விடுமுறை அளித்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி (கைதட்டல்), - புதுச்சேரியிலே கொள்கைப் பரப்பும்

நாடகத்தைத் தொடர்ந்து நடத்தி, அந்த நாடகம் ஈட்டிய வெற்றியின் அடிப்படையில் புதுவையிலே திராவிடர் இயக்க மாநாடு ஒன்றினைக் கூட்டி அந்த மாநாட்டிற்குத் தந்தை பெரியார் அவர்களையும் பேரறிஞர் அண்ணா அவர்களையும் அழைத்து அந்த மாநாட்டை நடத்துகிற நேரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றி நாங்கள் எல்லாம் மாநாட்டினுடைய அமைப்பாளர்களாக இருந்து நடத்தியநேரத்தில் அந்த நாடகத்தைப் பார்த்து வெகுண்டு போயிருந்த மாற்றுக் கட்சிக்காரர்கள் என்னைத் துரத்தித் துரத்தி அடித்துப் பாண்டிச்சேரி வீதியிலே நான் உயிரோடு இல்லை என்ற நம்பிக்கையோடு ஒரு சாக்கடையிலே தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டார்கள். யாரோ சில பேர் என்னை அவர்களுடைய வீட்டிற்கு எடுத்துச் சென்று என்னை உயிர் பிழைக்க வைத்தார்கள்.

பிறகு இரவோடு இரவாகப் பெரியாரும், அண்ணாவும் தங்கியிருந்த இடத்திற்கு நான் செல்லவேண்டும். அப்படிச் செல்லும்போதுகூட வழியிலே எதிரிகள் கண்டால் எனக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று எனக்கு ஒரு கைலியைக் கட்டிவிட்டுத் தலையிலே ஒரு தொப்பியை வைத்து ஒரு முஸ்லீமைப் போல மாறுவேடத்தோடு பெரியாரிடத்திலே கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

அந்த அளவிற்கு நான் அன்று மாறு வேடத்திலே தப்பி ஆபத்திலே இருந்து மீள்வதற்குக் கூட உதவிய உடைகள் உங்களுடைய உடைகள்தான். இஸ்லாமிய சமுதாயத்தினுடைய லுங்கியும்-தொப்பியும்தான்.

சீர்கேடுகள்

பிராமண குலத்திலே பிறந்தவர் பாரதியார். அந்தப் பாரதியார் என்ன பாடினார் - ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள் - என்று! ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடும் அறிவிலிகளே! அறிவற்றவர்களே! ஒரே கடவுள்தான். அது நம்முடைய மனசாட்சிதான். நம்முடைய உள்ளம்தான். மக்களுக்கு உழைப்பதுதான் கடவுள் தொண்டு என்று. இன்று நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோமே அந்த

நூற்றாண்டு விழாவினுடைய கதாநாயகர் பாரதியார் எழுதி வைத்து இருக்கிறார். ஆனால், அந்தப் பாட்டை மாத்திரம் இந்த நூற்றாண்டு விழா நேரத்தில் யாரும் பாடிக்காட்டமாட்டார்கள். "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்பதைப் பாடிக் காட்டுவார்கள். நமக்கு ஆட்சேபணை இல்லை.

'ஒம்சக்தி! ஒம்சக்தி!' என்று பாடினார் என பாடிக்காட்டுவார்கள். ஆனால் ஒரு புலவனுடைய வரலாற்றில் - ஒரு கவிஞனுடைய வரலாற்றில் தொடக்க காலத்திலே பாடியவை எவை? இடைக்காலத்திலே பாடியவை எவை? இறுதிக் காலத்திலே பாடியவை எவை? என்று தொகுத்துப் பார்த்தால் இறுதிக் காலத்திலே பாடிய பாடல்களிலே ஒன்றாகத்தான் 'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்' என்ற அந்தப் பாடல் இன்றைக்கும் ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

ஆனால், பாரதியாரை நாஸ்திகன் என்று யாரும் சொல்லவில்லை. பாரதியார் கடவுளை இழித்தும், பழித்தும் பேசினார் என்று யாரும் கூறவில்லை. பெரியாரை - அண்ணாவை அவர்கள் வழிநிற்கின்ற எங்களை மாத்திரம் 'கடவுளை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள்' என்று கூறுகிறார்கள்.

சமுதாய மாற்றம்

முதலிலே நாம் செய்து முடிக்க வேண்டிய மாற்றம் சமுதாய மாற்றமாகும். அந்தச் சமுதாய மாற்றத்திற்கு நமக்குத் துணை நிற்க வேண்டியவர்கள் யார்? ஆடவர்களைவிட பெண்டிர்தான். தாய்க்குலம்தான் நமக்குத் துணை நின்றிடவேண்டும்.

தமிழகத்தில் புறநானூறு - சங்க இலக்கியங்கள் இவைகளிலே காணப்படுகின்ற தாய்க்குலத்திற்கும் இன்று நாம் சந்திக்கின்ற தாய்க்குலத்திற்கும் உள்ள வேறுபாடுகளை உணராதவர்கள் அல்ல.

புலி ஒன்று பாய்ந்து வந்தபொழுது தன் கையிலே உள்ள முறத்தை எடுத்து அந்தப் புலியைத் துரத்தினாள் என்று நம்முடைய சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. புலியையே தன் கையிலே உள்ள முறத்தினால் துரத்தினாள் ஒரு மறத்தி என்று சங்க இலக்கியம் சொல்வதையும் படிக்கிறோம். அதைப் படித்துவிட்டு தெருவிலே போகிற நேரத்தில் வழியிலே பூனை ஒன்று குறுக்கே போனால் பயந்துகொண்டு பொல்லாத சகுனம் என்று வீட்டிற்கு

திரும்புகிறோம். அந்தச் சூழ்நிலையையும் காணுகிறோம்.

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால் அந்தச் சமுதாயத்தினுடைய ஆணிவேராக இருக்கின்ற தாய்மார்கள்தான் அதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்திட முடியும்.

இன்றைக்கு இந்தியத் திருநாட்டையே ஒரு பெண்மணி ஆளுகிறார் என்றால், அந்தப் பெண்மணிக்கு அவ்வளவு ஆற்றல் இருக்கிறதென்றால், ரஷ்ய நாட்டினுடைய அதிபர் பிரஷ்நேவ் இன்றைய தினம் இந்தியாவிற்குக் வருகை தந்து திருமதி இந்திராகாந்தி அவர்களோடு கலந்து பேசி ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு ஒப்பற்ற தலைவி இந்திரா காந்தி என்று பிரஷ்நேவ் பாராட்டுகிறார் என்றால் என்ன காரணம்?

அத்தகைய உள்ளங்களில் ஆரம்ப காலத்திலிருந்து கொழுந்து விட்டெரியச் செய்யப்பட்ட இந்தியாவினுடைய விடுதலைக் கனல் - இந்திய நாட்டு மக்களுக்காகப் பாடுபட வேண்டுமென்கின்ற அந்தப் பணியாற்றும் தன்மை இவைகள்தான் அவைகளுக்கெல்லாம் காரணம்.

அதைப் போல நம்முடைய வீட்டிலே பெண் குழந்தைகளானாலும், ஆண் குழந்தைகளானாலும் முறையே வீராங்கனைகளாக, வீரர்களாகத் திகழ - நம்முடைய தாய்மார்கள் அவர்களையெல்லாம் பழக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வீற்றிருக்கின்ற மணமகன் - எதிரே இருக்கின்ற தாய்மார்களுக்குத்தான் இவ்வளவும் சொன்னார் என்று கருதிக் கொள்ளாமல் தனக்கும் சொன்னதாகக் கருதிக் கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திட வேண்டும்.

சிந்திக்க வேண்டும்

தாழ்த்தப்பட்டவர்களாக, பிற்படுத்தப்பட்டவர்களாக, உயர் சாதிக்காரர்கள் அல்லாதவர்களாக இருக்கின்ற சமுதாயத்தினர்தான் இன்னமும் மதத்தின் பெயரால், புராணத்தின் பெயரால், கடவுளின் பெயரால், சாத்திர, சம்பிரதாயங்களின் பெயரால் தங்களைத் தாங்களே அடிமைகளாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிமைத் தளையிலிருந்து ஆணும் பெண்ணும் விடுதலை பெற்றாக வேண்டும். அதற்குத்தான் தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் அயராது பாடுபட்டார்கள்; அவர்கள் வழி நின்று நாமும் பாடுபட்டு வருகிறோம்.

கூட்டங்களிலே நாம் சந்திக்கின்ற தாய்மார்களைவிட இப்படிப்பட்ட மணவிழாக்களில் அதிக தாய்மார்களைச் சந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. பல்வேறு திருமண விழாக்களிலே தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. ஆனால், இங்கே தேர்தல் பிரச்சாரத்திற்காக நாங்கள் வரவில்லை. மக்களைத் திருத்துகின்ற பிரச்சாரத்திற்காக நாங்கள் வந்திருக்கிறோம் என்றும் குறிப்பிட்டார்கள்.

மக்களைத் திருத்துவது என்றால் என்ன? மக்கள் அதிலும் குறிப்பாகத் தமிழக மக்கள் எந்தெந்த வகையிலே தங்களைத் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்; தங்களைத் தாங்களே பயமுறுத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றிருக்கிறதா இல்லையா? தொட்டிலிலே இருந்து அப்படிப்பட்ட பயிற்சிகளை நாம் நம்முடைய குழந்தைகளுக்கு அளிக்கிறோமா? இல்லையா? என்பதைத் தாய்மார்கள் சிந்திக்க வேண்டும்.

தொட்டில் பழக்கம்

வெளிநாட்டிலே முன்னேறியிருக்கின்ற பிரதேசங்களிலே மட்டுமல்ல; முன்னேறியிருக்கின்ற இந்திய பிரஜைகளின் குடும்பங்களிலேகூட, குழந்தை அழுதால் அந்தக் குழந்தையை சமாதானம் செய்வதற்கு என்ன வழியை கையாளுவது என்பதை நூல்கள் வாயிலாகக் கற்று அந்தக் குழந்தைகளை எப்படி சிரிக்க வைப்பது, எப்படி சமாதானம் செய்வது அது எந்தவொரு காரியத்திலே பிடிவாதமாக இருக்கிறது; அதிலிருந்து அந்தக் குழந்தையை எப்படி மாற்றுவது என்பதில் அந்தத் தாய்மார்கள் அக்கறை கொண்டு அந்தப் பயிற்சியை பெற்றிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தாய்மார்களுக்கு இருக்கின்ற சங்கடங்கள் அவர்களுக்கு இருக்கின்ற அலுவல்கள், அவர்கள் அடுக்களை வேலைகளைக் கவனிப்பதா? அல்லது வேலைக்குச் செல்கிற கணவனுக்கு நேரத்தில் உணவு சமைத்து அனுப்புகின்ற வேலையைக் கவனிப்பதா? வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை உபசரிப்பதா என்பது போன்ற பல தொல்லைகளுக்கிடையே சங்கடப்படுகின்ற ஒரு தாய் வீட்டிலே குழந்தை அழுதால் அல்லது தொட்டிலில் படுத்துக்கொண்டு பிடிவாதம் பிடித்தால் அந்தத் தாய் குழந்தையை அடக்குவதற்கு இன்றளவும் தமிழ் நாட்டில் கடைப்பிடிக்கின்ற தந்திரம் என்ன?

தூங்குகிறாயா? இல்லையா? தூங்காவிட்டால் ஐந்து கண்ணன் வருவான் என்று அந்தக் குழந்தையை மிரட்டுகின்ற

வழியைத்தான் நம்முடைய தாய்மார்கள் கடைப்பிடிக்கிறார்கள். அந்தப் பயமுறுத்தலைக் கேட்கின்ற அந்தக் குழந்தை ஐந்து கண்ணன் வருவானாமே, இரண்டு கண்கள் உள்ள நம்முடைய தாயும் தந்தையும் மிரட்டினாலே இவ்வளவு பயமாக இருக்கிறதே ஐந்து கண் உள்ளவன் எப்படி இருப்பானோ என்ற பயத்தில் கண்ணை மூடிக்கொண்டு தூங்குகிறது. ஆனால் அந்தத் தொட்டில் பழக்கம் என்னவாகும்? அவன் வளர்ந்து வாலிபனாக விளங்கும் காலத்தில் அவனை கோழையாக ஆக்கிவிடுகிறது.

பேய் என்றால் எப்படி இருக்கும், பிசாசு என்றால் எப்படி இருக்கும், பூதம் என்றால் எப்படி இருக்கும் என்றெல்லாம் இப்படிப்பட்ட கற்பனைக் கதைகளைக் குழந்தைகளுக்குப் போதித்து அந்த நேரத்தில் அதனை அடக்கி வைக்கிற உபாயத்தை நாம் கையாளுவதால் அதனுடைய வாழ்க்கையில் அதனை ஒரு கோழையாக்கும் குற்றத்திற்கு நாம் ஆட்பட்டு விடுகிறோம். சிறிய குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதை வரலாற்றறுக் குறிப்புக்களைப் படிக்கின்ற நேரத்தில் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

தொட்டில் பழக்கம் என்று கூறுவார்கள். மணவிழா நிகழ்ச்சி என்ற காரணத்தால் தொட்டில் பழக்கம் என்பதுடன் நிறுத்துகிறேன். எதுவரையிலே என்கின்ற வார்த்தையை அமங்கலச் சொல்லை - இங்கே பயன்படுத்த நான் விரும்பவில்லை.

எனவே, தொட்டிலிலேயே நம்முடைய குழந்தைகளுக்கு நாம் என்ன சொல்லித்தருகிறோம். குழந்தை அழுதால் அதனுடைய தேவை என்ன என்பதை உணராமலேயே, அது பசித்து அழுகிறதா? பாலுக்கு அழுகிறதா என்பதைக்கூடப் புரிந்துகொள்ளாமல் - அதுஒருவேளை, வாய் திறந்து சொல்லமுடியாத வயிற்று வலியால் அழுகிறதா? தலைவலியால் அழுகிறதா? கணையா? மாந்தமா? என்று இவைகளைக்கூடப் புரிந்துகொள்ளாத தாய்மார்கள், அழுகிற குழந்தையை அடக்குவதற்காக அஞ்சு கண்ணன் வருகிறான், தூங்குகிறாயா இல்லையா? என்று தொட்டிலேயே மிரட்ட ஆரம்பிக்கிறார்கள். ஒரு காலத்திலே தமிழ் நாட்டு வீரர்கள் முரட்டுக் காளையை அடக்கினார்கள், புலியை அடக்கினார்கள். அந்தக் காளையை அடக்கித் தான் விரும்பிய காதலியைக் கைப்பிடித்தார்கள்; புலியை வீழ்த்தி அதனுடைய பல்லையும், நகத்தையும் எடுத்து வந்து தான் விரும்புகின்ற காதலிக்குச் செய்து போட்டார்கள். யானையை

அடக்கினார்கள் என்கின்ற அத்தகைய வீர பரம்பரையிலே உதித்த தமிழினம், இன்றைக்கு ஐந்து கண்ணன் வருகிறான்; பூச்சாண்டி வருகிறான்; பேய் பிசாசுகள் வருகின்றன என்கின்ற பயத்தைச் சின்னஞ்சிறு பருவத்திலேயே ஊட்டப்பட்டு அவர்கள் பயந்தாங்கொள்ளிகளாக ஆகிவிடுகிற நிகழ்ச்சிகளை இன்றைக்கு நாம் பார்க்கின்றோம்.

தாய்மார்கள் பெருமை

ஜப்பான் ஒரு காலத்தில் யுத்தத்தால் சீரழிந்து விட்ட நாடு என்றாலும் கூட அந்த நாடு மீண்டும் விழித்தெழுந்து இன்றைக்கு அது ஒரு வல்லரசாக இல்லாவிட்டாலும் வளமுள்ள நாடாக விளங்கக் காரணம் அந்த நாட்டுத் தாய்மார்கள் தான் என்று கூறப்படுகிறது.

தாய்ப்பாலோடு வீரப் பாலையும் சேர்த்து குழந்தைகளுக்கு அளிக்க வேண்டுமேயல்லாமல் அவர்களைக் கோழைகளாக வளர்த்துவிட்டால் நிலை என்னாகும் தெரியுமா? அவன் 25 வயது காளையாகி, வீட்டிலே படுத்துக் தூங்குகிற நேரத்தில் இப்படிப்பட்ட கிராமப் பகுதிகளில் இரவு 12 மணிக்கு ஏதோ இயற்கையின் தொந்தரவின் காரணமாக வீட்டின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகின்ற நேரத்தில் அங்கே ஒரு எருக்கஞ்செடி ஆடினால், அதனைப் பார்த்து பேய் வருகிறது, பூதம் ஆடுகிறது என்று எண்ணி அந்த இடத்திலேயே மயக்கம் போட்டு விழுகின்ற காட்சிகள் பலவற்றை நாம் கண்டு வருகிறோம்.

பேயும் இல்லை; பூதமும் இல்லை; எல்லாம் கற்பனைகள் என்று ஏறத்தாழ ஐம்பது, அறுபது ஆண்டுக் காலமாகச் சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக எடுத்துச் சொல்லி இன்று பேய், பூதங்கள் பற்றிக் கவலைப்படுகின்ற மக்கள் குறைந்து கொண்டு வருகிறார்கள். பேய், பூதம் எல்லாம் யாருக்கு முதலில் பிடிக்கிறது என்றால் பெண்களுக்குத்தான் பிடிக்கிறது. ஆண்களுக்கு அதிகமாகப் பேய் பிடிப்பதில்லை. காரணம் பெண்களுக்கு அதிகமாக தலைமுடிஇருப்பதோ என்னவோ, நமக்குத் தெரியாது. காரணம் பெண்களின் உள்ளம் பயந்த உள்ளம். அப்படி பழக்கப்படுத்தப்பட்டுவிட்ட உள்ளம்; அவர்கள் கோழைகளாக ஆக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால்தான் அவர்கள் ஆடுகிறார்கள். கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால், பக்தியின் பெயரால் அவர்கள் அப்படி ஆக்கப்பட்டு,

அதனால் ஆடுகிறார்களே தவிர, வேண்டுமென்றே ஆடுகிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன்.

வீரக்கதைகள்

மாவீரன் - மராட்டிய மண்டிலத்தைக் கட்டியாண்ட வீர சிவாஜிக்கு அவ்வளவு வீரம் எப்படி ஏற்பட்டது என்பதைப் பார்த்தால், அவருடைய தாயர் ஜீஜீபாய், சிவாஜிக்கு வீரக் கதைகளை எல்லாம் எடுத்துச் சொன்னாள்; மாவீரர்களுடைய சரித்திரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னாள்; அதைக் கேட்டுக் கேட்டு மராட்டிய மண்டலத்தினுடைய மாவீரனாக சிவாஜி திகழ்ந்தான் என்று வரலாறு சொல்லுகிறது.

எனவே, அப்படிப்பட்ட கதைகளுக்குத் தமிழகத்திலே பஞ்சம் இல்லை. நம்முடைய இலக்கியங்கள், புறநானூறு போன்ற வீர காவியங்கள் இவைகள் எல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற வீரக் கதைகளை நம்முடைய குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை அறிவு மிகுந்தவர்களாக ஆற்றல் மிகுந்தவர்களாக வீரம் மிகுந்தவர்களாக ஆக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

ராகு காலம்

கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு நீடாமங்கலத்திலே நடைபெற்ற திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன். அவர்கள் ஞாயிற்றுக்கிழமை நாலரை மணியிலிருந்து ஆறு மணிக்குள்ளாக திருமணம் நடைபெறும் என்று அழைப்பிதழில் அச்சிட்டிருந்தார்கள்.

பிறகு நான் திருமணத்தை நடத்தி வைத்துவிட்டு பிறகு வாழ்த்துரை வழங்குகிறபொழுது, "நாலரை மணியிலிருந்து ஆறுமணி வரை ராகு காலம் என்று எவனோ எழுதிவைத்தான். அதை நீங்கள் நம்புகிற காரணத்தால்தானே அந்த நேரத்தில் என்னை வரச் சொல்லுகிறீர்கள். எனவே, நாலரை மணியிலிருந்து ஆறு மணி வரை ராகு காலம் என்று எழுதியை எதிர்ப்பதற்கு வேண்டுமானால் உங்களுடைய மனத்திடம் பயன்படும் என்று நான் பாராட்டுகிறேன். ஆனால் நாலரை மணியிலிருந்து ஆறுமணி வரை ராகு காலம் என்பதை நீங்கள் நம்பி அந்த நேரத்தில் திருமணத்தை வைத்திருக்கிறீர்கள். நான் நம்பாத காரணத்தால் ஆறரைக்கு வந்தேன்" என்று சொல்லி மணமகனைத் திருப்திப்படுத்தினேன்.

யாரோ நாலரையில் இருந்து ஆறுவரை ராகுகாலம் என்று எழுதி வைத்தார்கள். அதுவும் வருவதாக நீங்களும் நம்பிக்கொண்டு அதிலேயே திருமணத்தை நடத்த வேண்டும் என்று கூறுகிறீர்களே! அப்படியானால் பஞ்சாங்கம் எழுதியவர்கள் எழுதிய ராகுகாலத்தை நீங்கள் நம்புகிறீர்களா? ஏற்றுக் கொள்கிறீர்களா என்று நான் கேட்டேன்.

நாலரையில் இருந்து ஆறு வரை ராகுகாலம் வரவும் இல்லை போகவும் இல்லை என்கின்ற எண்ணம் உடைய சுயமரியாதைக்காரர்கள் நாலரையில் இருந்து ஆறு வரை ராகுகாலம் வருவதை ஒப்புக்கொண்டு நான் அதிலேயே திருமணம் நடத்துகிறேன் பார் என்று கூறுவது கூட ஒருவிதமான மூடநம்பிக்கைதான் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

விஞ்ஞானமும் பஞ்சாங்கமும்

வசிஷ்டர்

எல்லா நேரமும் கடவுள் என்று ஒருவன் இருந்து உருவாக்கிய நேரம்தான் என்றால், அவன் உருவாக்கிய நேரம் எல்லா நேரமும் நல்ல நேரம் என்றே எண்ணிட வேண்டும்.

அப்படி எண்ணாவிட்டால் கடவுளைக் குற்றம் சாட்டுகிறோம் என்று பொருள். எல்லா நேரத்தையும் உருவாக்கினான் என்பது உண்மையானால், எல்லா நேரமும் நல்ல நேரம் என்று நாம் எண்ணிடவேண்டும். இதிலே நாம் நல்ல நேரம், கெட்ட நேரம் என்று பிரிக்கத் தேவையில்லை.

எத்தனையோ சுயமரியாதைத் திருமணங்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்குத் தொடங்கி 6 மணிவரையில் நடைபெற்றுள்ளன. கொழுத்த இராகுகாலம் என்பார்களே அந்த இராகுகாலத்தில் நடைபெற்றுள்ளன. அப்படி நடைபெற்ற காரணத்தால் அந்தக் குடும்பத்திலே ஏதாவது குந்தகம் ஏற்பட்டதா என்றால் இல்லை. அது மாத்திரமல்ல. குழந்தைகளே அவர்கள் பெறவில்லையா? என்றால் யாராலேயும் சொல்லமுடியாது.

இராமாயணத்திலே நம்பிக்கை உள்ளவர்களுக்குச் சொல்லுகிறேன். குறிப்பாகத் தாய்மார்களுக்குச் சொல்லுகிறேன். இராமருக்குப் பட்டாபிஷேகம் நடத்த நாள் பார்த்தது யார்? நம்

ஊர்ப் புரோகிதாரா? அல்ல. அந்தப் புரோகிதர்களுக்கெல்லாம் பெரும் புரோகிதர். ரிஷிகளுக்கெல்லாம் பெரிய ரிஷி வசிஷ்டர். வசிஷ்டர் யாரை பிரம்ம ரிஷி என்கிறாரோ அவர்தான் பிரம்ம ரிஷி. அப்படிப்பட்ட வசிஷ்டர் வாயால் சொல்லப்பட்ட நாளில்தான் ராமனுக்கு மகுடம் சூட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் மகுடாபிஷேகமா நடைபெற்றது? வசிஷ்டர் பார்த்த நாளில் ராமன் காடேகினான் என்று நான் சொல்லவில்லை; வால்மீகி சொல்கிறார்; கம்பர் சொல்கிறார் கருணாநிதி சொல்லவில்லை.

எனவே, நாள், நட்சத்திரம், காலம் இவைகள் எல்லாம் நாமாகக் கற்பனை செய்துகொண்டு நம்மை நாமே மூடநம்பிக்கைக்குள் புகுத்திக் கொள்கிற காரியங்களே அல்லாமல் வேறில்லை என்பதற்காகத்தான் நான் இவைகளை உங்களிடத்திலே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வளர்பிறையும் தேய்பிறையும்

வளர்பிறையிலே திருமணங்கள் நடைபெற்றால் அது சிலாக்கியம் என்றும், தேய்பிறையிலே அதாவது பௌர்ணமி வந்த பிறகு அமாவாசைக்கு இடையிலே உள்ள காலத்திலே திருமணம் நடைபெற்றால் அது தேய்பிறை என்று சொல்வார்கள்.

நான் அவர்களுக்குத் சொன்னேன். தேய்பிறை வந்தாலும், பிறகு நிச்சயமாக வளர்பிறை வரத்தான் போகிறது. (கைதட்டல்) எனவே, இந்தப் பிறையைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் என்று நான் சொன்னேன்.

நாம் இங்கே பார்க்கிற பிறை வேறு; இதே பிறையை - இதே பிறைச் சந்திரனை அமெரிக்காவிலே சென்று பார்த்தால் அது வேறுவிதமாக இருக்கும். நான் அமெரிக்காவிற்குச் சென்றவன் என்ற முறையிலே நான் அங்கு பார்த்த பிறைச் சந்திரனைப் பற்றி உங்களுக்கு விளக்க வேண்டுமானால், இங்கே தெரிகின்ற பிறைச்சந்திரன் கீழே வளைந்திருக்கின்ற பிறைச்சந்திரன், அமெரிக்காவிலே போய்ப் பிறையைப் பார்த்தால் - அது மூன்றாம் பிறையாக இருந்தாலும், ஐந்தாம் பிறையாக இருந்தாலும் - அந்தப் பிறையைப் பார்த்தால் அது கீழே இருக்கின்ற கோடாக இல்லாமல், மேலும் கீழுமாக இருக்கின்ற கோடாக அங்கே அமைந்திருக்கின்ற காட்சியைக் காண முடிகிறது.

எனவே, விஞ்ஞானத்தினுடைய புதுமை மலர்ந்து, அந்தப் புதுமையின் காரணமாக நாம் பெற்றிருக்கின்ற அறிவு வளர்ந்து பகுத்தறிவுத் தன்மையும் வளர்ந்து, நாட்டுக்கு நாடு கோள்களுடைய வடிவங்கள் வேறுபடுகின்றன என்ற சூழ்நிலையையும் புரிந்து கொண்டு இருக்கின்ற காலத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

சுக்கிரன் என்றால் இதுவரையிலே நாம் எண்ணிக்கொண்டு இருந்தது என்ன? அது ஒரு திசை. அந்தச் சுக்கிர கிரகத்தினுடைய திசை நமக்கு ஏற்படுமேயானால், எல்லாவிதமான அதிருஷ்டங்களும் ஏற்படும். சுக்கிர திசை வந்து விட்டால் அவன் ராஜாவாக இருப்பான். அவனுடைய வாழ்க்கை ராஜபோகமாக இருக்கும் என்று மாத்திரம்தான் நாம் கற்றுக் கொண்டிருந்தோம்.

விஞ்ஞான வளர்ச்சி

ரஷ்ய நாட்டுக்காரர்கள் அவர்களுடைய விஞ்ஞானப் புதுமையின் காரணமாக சுக்கிரனுக்கே சென்று அந்தச் சுக்கிரனிலே இருக்கின்ற மண்ணை-கல்லை இங்கே உலகத்திற்குக் கொண்டு வந்து, அதனை ஆராய்கின்ற அளவிற்கு - சுக்கிரனுக்கே விண்வெளி கப்பலை அனுப்புகின்ற அளவிற்கு ரஷ்யா முன்னேறி இருக்கிறது.

அதைப்போலவேதான் அமெரிக்காவிலே உள்ளவர்கள் சந்திர மண்டலத்திற்குச் சென்று, சந்திர மண்டலத்திலே அடியெடுத்து வைத்துச் சந்திரமண்டலத்திலே நடந்து சந்திரமண்டலத்திலே இருக்கிற கற்களை எடுத்து வந்து நமக்கெல்லாம் காட்டுகின்ற அளவிற்கு அங்கே விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. ஆனால், நாமோ, இன்னமும் சந்திரனைப் பார்த்து வளர்பிறையா? தேய்பிறையா? எந்தப் பிறையிலே கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று நாள் பார்த்துக்கொண்டு இருக்கிறோமே அல்லாமல் சந்திரன் எங்கே இருக்கிறான்? சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள தொலைவு என்ன? சந்திர மண்டலத்திற்கு செல்ல முடியுமா? அங்கே மனிதன் வாழ முடியுமா? வாழ்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க முடியுமா? அங்கே ஜீவராசிகள் இருக்கின்றனவா? அதேபோல செவ்வாய் கிரகத்தைக் காணமுடியுமா என்று இந்த உலகத்தை விட்டு அண்டத்திலே இன்றைக்கு ஆயிரக்கணக்கிலே நிரம்பிக்

கிடக்கின்ற சுக்கிரனைப் போன்ற, செவ்வாயைப் போன்ற, புதனைப் போன்ற சனியைப் போன்ற கோள்களையெல்லாம் ஆராய்கின்ற அளவிற்கு மேல்நாட்டுக்காரர்கள் விழிப்புற்று இருக்கிறார்கள்.

வந்தவர்கள்

நம்முடைய நாட்டில் நாம் இன்னமும் பின்தங்கிய மக்களாக இருக்கிறோம். ஏற்கனவே நாம் மற்றவர்களால் தாழ்த்தப்பட்டவர்கள், மற்றவர்களால் பிற்படுத்தப்பட்டவர்கள். நாமே பின்தங்கியவர்கள் அல்ல, நாமே தாழ்த்தப்பட்டவர்கள் அல்ல. பிறரால் நாம் தாழ்த்தப்பட்டோம். பிறரால் நாம் பிற்படுத்தப்பட்டோம். யாரந்த பிறர்? எங்கிருந்தோ வந்தார்கள்; எப்படியோ இங்கு குடிபுகுந்தார்கள். வந்து ஆண்டுகள் ஆயிரத்துக்கு மேலாகி விட்டன என்ற காரணத்தினால் போனால் போகிறது என்று இங்கே அவர்களை அனுமதித்துவிட்டோம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்தவர்களை அனுமதித்திருக்கிறோம். அப்படி அனுமதிக்கப்பட்டவர்கள் இங்கே இந்த நாட்டுக்கு உரிமையானவர்களை இந்த மண்ணுக்கு உரியவர்களை - இந்த கலை; கலாச்சாரம், இலக்கியம், வரலாறு இவற்றுக்குரியவர்களை அடிமைகளாக - தொழும்பர்களாக - பொட்டுப்பூச்சிகளாக - புன்மைத் தேரைகளாக வர்ணிக்கின்ற ஓர் அவல நிலை இங்கே ஏற்பட்டிருக்கின்றது. எனவே தான் நாம் அவர்களால் பிற்படுத்தப்பட்டோம். அவர்களால் தாழ்த்தப்பட்டோம். எனவேதான் நம்மைக் குறிக்கின்ற சொல் நாம் பிற்படுத்தப்பட்ட மக்கள்; நாம் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று நம்மை நாமே நொந்து கொள்ளவேண்டிய ஒரு சோகமயமான சூழ்நிலைக்கு நம்முடைய நாடு - நம்முடைய இனம் - நம்முடைய சமுதாயம் பின்தள்ளப்பட்டிருக்கின்றது.

இவைகளிலே இருந்தெல்லாம் நமக்கு விமோசனம் கிடைக்க வேண்டாமா? என்ற கேள்விக்குறி எடுத்த விசுவரூபம்தான் தந்தை பெரியார் இராமசாமி என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

பஞ்சாங்கப் படைக்கலம்

பஞ்சாங்கம் இன்றைக்குச் சில பேருடைய பிழைப்பிற்கு வழிகாட்டியாக மாத்திரமல்ல - ஒரு பெரிய சமுதாயத்தை ஏமாற்றுவதற்கான படைக்கலமாகவும் மாறிவிட்ட காரணத்தினாலேதான் பஞ்சாங்கத்தின் மீது நாம் வெறுப்புக்

கொள்ளவேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு நாம் ஆளாகிறோமே அல்லாமல் வேறு அல்ல.

பஞ்சாங்கம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய தினம் உலகத்திலே இருக்கின்ற விஞ்ஞானிகள் விண்ணிலே இருக்கின்ற கோள்களைப் பற்றி அதனுடைய நன்மைகளைப் பற்றி என்ன கூறுகிறார்களோ அவைகளையெல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பஞ்சாங்கத்தை எழுதியவர்கள் கூறி வைத்து இருக்கிறார்கள்.

வானத்திலே சஞ்சரிக்கிற சூரியன் வடக்குத் திசையிலே சாய்ந்து எத்தனை மாதம் செல்வான் என்றும், என்றைக்கு அந்த சூரியன் தட்சணாயனமாக தெற்குத் திசையிலே நகர்ந்து செல்வான் என்றும் பஞ்சாங்கக் குறிப்புகள்தான் நமக்குத் தெரிவிக்கின்றன.

என்னுடைய கிராமத்திலே நான் சின்னஞ்சிறு பிள்ளையாக இருந்தபொழுது, யார் வீட்டிலாவது குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தை பிறந்த நேரத்தைக கணிப்பதற்காக என்னுடைய தந்தையை நாடி ஓடோடி வருவார்கள். இரவு நேரமாக இருக்குமேயானால் என் தந்தை உடனடியாக ஆகாயத்தை நோக்கி எந்தெந்த மீன்கள் சந்திரனுக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து நேரத்தைச் சரியாகச் சொல்வார். யாராவது படித்தவர்கள் அல்லது கைக்கடிகாரம் வைத்து இருப்பவர்கள் அவர் சொல்லுகிற நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர் சொன்ன நாழிகையும் மணியும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மிகச் சரியாக இருக்கும்.

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், என் தந்தையின் திறமையைச் சொல்வதற்காக அல்ல. இப்படி, விண்மீன்களைப் பார்த்து, நட்சத்திரங்களைப் பார்த்து நேரத்தைக் கணிக்கக்கூடிய ஆற்றலையும் வழிமுறைகளையும் பஞ்சாங்கங்கள் நமக்குத் தந்து இருக்கின்றன.

இன்ன இன்ன மாதங்கள் மழைபெய்யக்கூடிய மாதங்கள் என்றும் இன்ன இன்ன மாதங்கள் வசந்தகாலம் என்றும் இன்ன இன்ன மாதங்கள் குளிர்காலம் என்றும் இப்படியெல்லாம் வகுத்தளித்து என்ன என்ன கோள்கள் எந்த எந்தப் பாதையிலே சஞ்சரிக்கும் என்றும் எழுதி வைத்து இருக்கிறார்கள்.

நாம் சனி கோளினுடைய உருவத்தை எத்தனையோ ஆண்டு காலமாக பாலபருவத்தில் இருந்து ஒரு பந்தைச் சுற்றி வளையங்கள் வானவில்லைப் போல வளையங்கள் இருப்பதைப் பார்த்து இருக்கிறோம். இன்றைக்கு ஆராய்ச்சியாளர்கள் விண்வெளிக்குக் கலத்தைச் செலுத்தக்கூடிய அமெரிக்க விஞ்ஞானிகளாகட்டும் அல்லது ருஷ்ய விஞ்ஞானிகளாகட்டும் அவர்கள் எல்லாம் சனிகிரகத்தையே படம் எடுத்து உலக மக்களுக்கு காட்டுகின்ற நேரத்தில் நாம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் எப்படி சனிக்கிரகம் இருக்கும் என்று கருதினோமோ, அந்த கிரகத்தை இப்பொழுது படம் எடுத்துப் பார்க்கின்ற நேரத்தில் அன்றைக்கு இந்த கோள் ஆராய்ச்சி செய்தவர்கள் கிரக ஆராய்ச்சி செய்தவர்கள் எப்படி படம் எடுத்துக் காட்டினார்களோ அப்படிதான் நாம் இன்றைக்கும் புகைப்படங்களின் மூலமாக நாம் அந்தக் கிரகத்தைப் பார்க்க முடிகிறது.

எனவே பழைய காலத்தில் கண்டுபிடித்தவர்கள் எல்லாம் ஏதோ குப்பைத் தொட்டிக்குப் போகவேண்டும் என்று நான் கூறவில்லை.

ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் நாம், அவைகளையெல்லாம் தெய்வீகத்திற்கு அடிமையாக்கி - மதத்திற்கு அடிமையாக்கி - புராணக் கருத்துக்களுக்கு அடிமையாக்கி அதோடு விஞ்ஞானத்தைக் கலந்து அதை விரிவுபடுத்தாமல், அதையே மேலும் வளர்த்துக் கொள்ளாமல் அப்படி வளர்த்துக் கொள்ளப்பட்ட அறிவின் காரணமாக உலகத்தையே ஆட்டிப் படைக்கக்கூடிய சக்தியை நாம் பெற்றுக்கொள்ளாமல் மூடநம்பிக்கையின்பால் விழுந்துவிட்டோம்.

அப்படிப்பட்ட ஒரு பெரிய சமுதாயத்தை மூடநம்பிக்கையிலே ஆழ்த்திவிட்ட சில எண்ணங்கள் - சில கொள்கைகள் - சில கதைகள் - இவைகளின் காரணமாகத் தாழ்ந்துவிட்ட இந்தச் சமுதாயத்தை கைதூக்கிவிட வேண்டும் என்பதற்காகத்தான் - இந்தச் சமுதாயத்தினுடைய கண்களை மறைத்துக் கொண்டிருக்கின்ற மாசு மருக்களை - தூசு தும்புகளையெல்லாம் எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்கள்.

சுயமரியாதை இயக்க மருந்து கொஞ்சம் கசப்பான மருந்து; அந்த கசப்பான மருந்தை இலையில் வைத்து, தேனையும் குழைத்து மக்களுக்குத் தந்த அந்தப் பெரும்பணியை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

எப்படியோ, மருந்து பெரியார் தந்த மருந்துதான்; அதிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்த ஆற்றல் என்ற தேனும் கலந்த காரணத்தால் மருந்தை தமிழ்ச் சமுதாயம் உண்டது; அந்த மருந்துண்ட காரணத்தால் இன்றைக்குத் தமிழ்ச் சமுதாயம் நிமிர்ந்து நிற்கிறது; பீடு நடை போடுகிறது.

தூண்கள்

வலுவிலே தூண்கள் தூண்கள்தான். ஆனால் தூண்கள் ஒன்றையொன்று நெருங்கி நிற்பதில்லை. இங்கே கூடப் பார்க்கின்றீர்கள். இந்தப் பந்தலுக்கு அமைக்கப்பட்டிருக்கின்ற பந்தல் கால்கள் எல்லாம் தூண்கள்தான். ஆனால் நெருங்கி நிற்காத தூண்களை மாத்திரம் அமைத்துவிட்டு, நெருக்கமாக இருக்கின்ற கீற்று மேலே போடப்படாவிட்டால் உங்களுக்கு நிழல் கிடைக்காது. எனவேதான் தூண்களாகவும் இருக்கவேண்டும். அதே நேரத்திலே கீற்றுக்களை நெருக்கமாக இணைக்கின்ற பந்தலாகவும் அந்த கீற்றுகள் காற்றிலே ஒன்றோடொன்று மோதி அடித்து காற்றால் தள்ளப்பட்டுவிடாமல் ஒவ்வொரு கீற்றிலும் முடிச்சுபோடுகின்ற கயிறுகளாக நார்களாக நம்முடைய கழகத் தொண்டர்கள் இருந்திடவேண்டும்.

* * * * * *

